விலை ரூபா 1–25

ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 2 வைகாசி 15 நம்ழான் 30 இதழ் 97

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 29-5-1987

யாழ் குடாநாட்டு நிலைமை

புதுடில்லிசென்றுராஜீவுடன் எம்.ஜி.ஆர்நேரில் ஆலோசனை!

புதுடில்லி, மே-28

இலங்கையின் யாழ் குடா நாட்டில் மோசமாகிவரும் தமிழ்மக்களின் நிலை குறித்து தமிழகமுதல்வர் எம் ஜி ராமச் சந்திரன் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியுடன் நேரடி அவசரஆலோசனைகளை நடத்தி யுள்ளார்.

திரு. எம்.ஜி ராமச்சந்திரன் அவசர பயணமொன்றை மேற் கொண்டு புதுடில்லி வந்திருந் தார். அவருடன் தமிழக உணவு அமைச்சர் திரு. எஸ். ராமச்சந்திரனும் வந்திருந் தார்.

புதுடில்லியில் முதல்வர் இந் தியப் பிரதமர் ராஜீவுடன் சுமார் ஒரு மணித்தியாலமாக

(3ம பக்கம் பார்க்க)

வண்ணைச் சிவன் கோயில் கொடூரம்: அரசின் கோரத் தாக்குதலின் வெளிப்பாடு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் மீது கடந்த நான்குதினங்களாக இடம்பெறும் அரசின் கோர த்தாண்டவத்தின் உச்ச வெளிப்பாடாக வண்ணை சிவன்கோவில்மீதான கோர த்தாக்குதல் காணப்படுகின் றது

சுமார் 200 ஆண்டுகளாக வர லாற்றுப் பெருமை கொண் டது இந்த ஆலயம். இதன் உள்வீதியின் பிரதான கோபுரத்தின் கீழேயும், வெளிவீதியில் கட்டப்பட்டு வரும் வாயிற் கோபுரத்தின் கீழேயும் இக்கோவிலுக்குள் உயிரிழந்தவர்களின் இரத் தக்கறை உறைந்து திரண்ட நிலையில் 'ஈ'க்கள்மொய்த்தி திருக்கக்காணப்பட்டன.

உள்வீதியின் பழைய கோபுரம் இடிந்து வீழ்ந்துள் ளது. புதிதாகக்கட்டப்படும் வாயிற்கோபுரத்தின் கருங் கல்லினாலான மேற் தளப் பகுதியில் வெடிப்பு ஏற்பட் டுள்ளது. இத்துடன் மேற் பகுதியில் நேராகவெடிப்பு காணப்படுகிறது.

இதன் காரணமாக இக் கோபுரம் எந்நேரத்திலும் இடிந்துவிழும் நிலையில் உள் ளது.

வசந்தமண்டபத்துக்கு முன்பாகவுள்ள அனைத்துத் தூண்களும், மேற் கூரைக ளும் இடிந்துவீழ்ந்து காணப் படுகின்றன.

விக்கிரகங்கள் வைக்கப் பட்டுள்ள மூலஸ்தானக்கட் டிடங்கள் சேதமாகவில்லை ஆயினும் அவற்றின் மேற் பகுதிகளில்வெடிப்பும் சிதை வுகளும்காணப்படுகின்றன.

கோயில் முகாமையாளர் களில் ஒருவரான முத்து காயாரோகண செட்டியார் என்பவரும் கோயிலுக்குள் கொல்லப்பட்ட ஏழுபேரி ஒருவராவர்.

வெளிநாடுகளில் உள்ள இலங்கை

தமிழர்கள் அரசாங்க, தூதரக வட்டாரங்களுடன் தொடர்பு!

கொழும்பு, வியாழன்

யாழ்.குடாநாட்டுடன் அனைத்துத் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டநிலையில் ஊரடங்குச் சட்டம் அமுலாக்கத்துடன் இடம்பெறும் இராணுவநடவடிக்கைகள் குறித்து வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தமிழர்கள் இலங்கை அரச வட்டாரங் களுடனும் தத்தமது நாடுகளைச்சேர்ந்த தூதரகங்களுடனும் தொடர்பு கொண்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் குடா நாட்டை மீண் டும் கைப்பற்ற அரச படை யினர் தீவிரமாக இயங்கி வருவதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது.

யாழ் குடாநாட்டுடனான அனைத்து உள்நாட்டு, வெளி நாட்டு தொலைபேசி, போக்கு வரத்து தொடர்புகள் துண்டிக் கப்பட்ட நிலையில், இந்த அறிவிப்பு வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தமிழர்களை பெரும் கலக்கத்திலாழ்த்தி யிருப்பதாக அறிவிக்கப்படு கின்றது

ஈழநாடுவுக்குக் கிடைத்த நம்பத்தகுந்த வட்டாரங்களின் தகவல்கள் மூலம், இலங்கை வெளிநாட்டமைச்சு தேசிய பந்தோபஸ்து அமைச்சு ஆகிய வற்றுடன் வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தமிழர்கள் யாழ் நிலைமை குறித்து அறிய நேரடித்தொலைபேசித்தொடர் புகளை கடந்த சில தினங் களாக ஏற்படுத்திவருகின்ற னர் என்று தெரிவிக்கப்பட் டுள்ளது.

அத்துடன் வெளிநாட்டு இலங்கைத் தமிழர்கள் தாம் இருக்கும் நாடுகளின் இலங்கை யிலுள்ள தூதரகங்கள் மூலமா கவும் இலங்கை நிலைமை பற்றி அறியத் தொடர்பு கொண் டுள்ளனர் என்று தெரிவிக்கப் படுவதுடன் இலங்கை அரசி டம் குடாநாட்டின் மீதான இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தும்படி கோருமாறு அவற்றிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர் எனவும் தெரி விக்கப்பட்டது.

இதுதவிர கொழும்பிலுள்ள உறவினர்களிடமும் வெளி நாட்டிலுள்ளவர்கள் தொலை பேசி மூலமாகத் தமது வருத் தத்தையும், யாழ் நிலைமை குறித்தஅக்கறையையும் தெரி வித்து வருகின்றனர் என்று அறிவிக்கப்பட்டது.



'பொம்மர்' தாக்குதலுக்கு பலியான சிறுவன்

ஊரடங்கு என்ற ரீதியில்

எங்கும், எங்வேளையிலும் கண்மூடித்தனமான தாக்குதல்!

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ் குடாநாட்டின் மீது 'ஊரடங்குச்சட்டம்' என்று அறிவிக்கப்பட்டதை யடுத்து அரசபடைகள் கண்மூடித்தன மான தாக்குதல்களில் இறங்கி வருவது தெரிந்ததே.

தொடர்ந்து அமுல்படுத்தப் பட்டுள்ள ஊரடங்குச் சட்டம் காரணமாக அத்தியாவசிய உணவுப் பொருட்களை வாங்கு

(3-ம் பக்கம் பார்க்க)

உண்மைநிலை அறிய அமிரை நாடு திரும்பும்படி அரசாங்கம் அழைப்பு!

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்ட ணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கத்தை நேரில் வந்து யாழ். குடா நாட்டின் நிலைமைகளைப் பார் க்கும்படி அரசாங்கம் கேட்டு ள்ளது.

திரு. அமிர்தலிங்கம் யாழ். குடாநாட்டில் இடம் பெற்று வரும் இராணுவ நடவடிக் கைகளில் சுமார் 100 பேர் வரை கொல்லப்பட்டிருப்ப தாக சென்னையில் அறிவித் துள்ளார் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

இலங்கை அரசு இந்த அறி விப்டை மறுத்து வெளியிட்டு ள்ள பதில் அறிவிப்பிலேயே திரு. அமிர்தலிங்கத்தை நாடு திரும்பி நிலைமையை நேரில் அவதானிக்கும்படி கேட் டுள்ளது.

ஈழநாடு அலுவலகமும் சேதமடைந்தது

(யாழ் - வெள்ளி)

யாழ் - நகரம் மீது நேற்று முன்தினமிரவு மேற்கொள்ளப் பட்ட ஆகாயத் தாக்குதல் களினால் 'ஈழநாடு' அலுவலக மும் சேதமடைந்தது.

இத்தாக்குதல் பெரும் பாலும் 'ஈழநாடு' அலுவலகத் தின் சுற்றுடலிலேயே இடம் பெற்றது இதனால் 'ஈழநாடு' அலுவலகத்தின் முன்பகுதி சேதமடைந்தது- எனினும்

(3-ம் பக்கம் பார்க்க)

'ஷெல்' வேட்டுக்களை மிஞ்சும் கடல் பீரங்கிக் குண்டுகள்!

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் நேற்று முன் தினம் நடாத்தப்பட்ட 'ஷெல்' பீரங்கித் தாக்குதலினால்,சுண் டிக்குழி பழைய பூங்கா வீதி யில் மூவர் துடிதுடித்து பலி யானார்கள்.

கோட்டை இராணுவ முகா மிலிருந்து நேற்று முன்தினம் 'ஷெல்' தாக்குதலும், மண்டைதீவிலுமிருந்து பீரங்கித் தாக்குதலும் மேற் கொள்ளப்பட்டன.

(3-ம் பக்கம் பார்க்க)

மணிவாக்கு

தகுதி இருந்து ஒன்றை அடையாமல் இருப்பது, தகுதியின்றி அதை அடைவதைவிட மேலானது.

— இங்கர்சால்.

நமது நோக்கு

மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் பேராபத்து

'கொடுங்கால் மன்னர் வாழும் நாட்டின் கடும் புலி வாழும் காடு நன்றே, என்பது பழமொழி.

கடந்த சில தினங்களாக யாழ்ப்பாணக் குடாநாடு படும்பாடு ஒரு புது மொழியை நினைவூட்டுகிறது

வானிலிருந்து விழும் குண்டுகளும், நிலத்தில் இருந்து வரும் ஷெல்களும் பொதுமக்களையே அழித்துவருகின்றன. அவர்களின் சொந்த வீடுகளை மட்டுமல்ல பொது நிறுவனங்களை — கோயில், மருத்துவமனை, பாடசாலைகள் என்பனவற்றையும் தகர்த்தெறிகின்றன. யாழ்ப்பாணம் கடும் புலி வாழும் நாடாகின்றதா?

புலிப்படையினரை பூண்டோடு ஒழிக்கமுயலும் அரசபடையினருக்கு அப்பாவி மக்களே அகப்படுகின்றனர். இதன் முழு விபரங்களை வெளிஉலகறிய வழியில்லாது தொடர்புகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டிருக்கின்றன. மக்கள் படும் வேதனைக்கு இருளே பொருத்தமான சூழ்நிலை என்பதால் மின்னொளி இல்லாது குடாநாடு இருளில் மூழ்கியிருக்கிறது. இதனிலும் பெரிய வெற்றியை இலங்கை இராணுவம் நினைக்கமுடியுமா?

நான்கு கோடி வியட்னாம் மக்கள் தங்கள் 'தேசத்தின் விடுதலைக்கு' பத்து வருடத்துக்குமேல் அமெரிக்கஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடி வெற்றிபெற்றது உலகம் போற்றிய செய்தி. அன்று எங்களிற் பலருக்கு இது ஒரு வெறும் வீரச் செய்தி போலிருந்தது.

தொகையில் நாமொரு சிறு சமூகமானாலும், விடுதலைவேண்டி நிகழும் இப்போர் மக்கள் போராக உருவெடுக்காத நிலையில் அத்தகைய வெற்றியை இலகுவில் பெறமுடியாது. எங்களிற் சிலர் இன்றும் பார்வையாளர்களே.

எமது இளைஞரின் பேராண்மை வியட்னாம் வீரர்களுக்குச் சற்றும் சளைத்ததல்ல; ஆனால் வியட்னாம் மக்கள் ஒவ்வொருவரும் போர்முறையில்பயிற்சிபெற்றதும் வேற்று நாட்டின் ஆதிக்கத்தை முறியடிப்பதில் கொண்டவீறும் வெற்றிக்குவித்தாகின. வேறுபாடு எதுவானாலும் எம்மைத்தாக்குபவர்கள் எங்கள் எதிரிகளே! எமது நாட்டின் அரசென்றாலும் இன்று நடைபெறும் விமானப்போர், பாதுகாப்பற்ற மக்களை அழிக்குமென்பது தெட்டத்தெளிவு. எக்காலப்போர் முறைக்கும் இது விரோதமானது.

அரக்கர் குலமும் இவ்விதகொடுமையில் தொடருமென்று எண்ணுவதற்கில்லை.

அதிகாரத்தை கையில் வைத்திருப்பவர்கள், அதனைப்பேணும்வகையில் மக்களைக்கொன்று குவிக்கத்தயாராகவிருக்கின்றார்கள். எமது நாகரீகம் அழிந்துவிடுமோவென்ற அச்சம்கிடையாது.

தாக்குதலில் எத்தனை பேர் பலியானார்கள்-உயிர்ப்பலி எவ்வளவு, தமிழர் ஜனத்தொகையில் அது என் பங்கு பொறுத்துக் கொள்ளக்கூடிய மனித நஷ்டம்? — இவ்வித புள்ளி விபரங்களினாலேயே மனித வாழ்க்கையைப் பற்றிக் கணக்கிடுகிறார்கள் இன்றைய ஆட்சியாளர்.

ஒரேநாட்டுமக்கள்; அவர்களுக்குள்ளே ஏற்பட்ட சச்சரவு இவ்வளவு தூரம் பெருத்திருக்கிறது! அதற்காக எத்தனையோ தலைமுறைகளாக எண்ணற்ற சாதனைகள் புரிந்த சமூகம் குண்டுக்கும், ஷெல்லுக்கும், ஹெலிக்கும் இரையாவதைத் தடுக்கத் தெரியாது தடுமாறுகிறது இன்றைய ஆட்சி.

வடக்கில் குறிப்பிட்ட தொகை தமிழர்களையும், அவர்கள் உடைமையையும் அழித்துவிட்டால் தெற்கில் நிலை மையைச் சமாளிக்கலாமென்ற பகற்கனவு இன்னும் அரசுக்கு உண்டு. இந்த நிலையே நாட்டின் அரசியலில் மிக ஆபத்தானது.

தென்னிலங்கை மக்கள் இங்கு நடைபெறும் கொடுமைகளைக் கண்டு, இது நாடனைத்துக்கும் பேராபத்து; நாட்டுமக்களுக்கு-அரசியல்தலைவர்களுக்கல்ல-என்று உணர்ந்து விழித்துக் கொள்ளவேண்டும்.

இது சிங்கள தமிழ் போரல்ல வென்பதை மீண்டும் வற்புறுத்துகின்றோம். தமிழ்ப்போராளிகள் தமிழருக்கு நிவாரணம் தேடி அலைகின்றனர்.

தமிழ்ப் பயங்கரவாதிகளை ஒழித்துக் கட்டும் போர் என்று சிங்கள மக்களை ஏமாற்றும்சிங்களத் தலைவர்கள் தங்களுக்குள் போட்டியிடுவது இதற்குச் சான்றாகும் இன்று வடக்கு நாளை தெற்கென்ற தீர்க்கதரிசனம் வேண்டும்.

நம்மால் என்ன செய்யமுடியும் என்ற மனப்பான்மை குண்டுக்கும், ஷெல்லுக்கும் பாதுகாப்பில்லாத மக்களைப் பீடிப்பது இயற்கை. "தமிழ் மக்களைக் காப்பாற்றுங்கள்" என்ற மன்றாட்டம் இந்தியப் பிரதமருக்கும், தமிழ்நாட்டு முதலமைச்சருக்கும் விடுவதில் என்ன ஆச்சரியம்?

காட்டுமிராண்டித்தனமாகத் தெருவிலும், திண்ணையிலும் வாழ்க்கைக்கு வழியற்று ஊதியம் தேடுபவர்கள் கொல்லப்படுவதற்கு யார் பொறுப்பு?

நம்மைச் சூழக் காணப்படும் துயரத்தையும் அநீதியையும் போக்குவதற்கு தன்னாலானதை செய்யத் தவறுகின்ற ஒவ்வொரு மனிதனும் மனிதகூட்டமும் இதற்குப் பொறுப்பு. உள்ளூர், வெளியூர் என்ற விவாதம் இன்றுஅர்த்தமற்றது.

நாட்டையும் நம்மையும் பயமுறுத்தும் பயங்கரமான இந்த நீண்டகால பிரச்னைகள் ஒரு நொடிப் பொழுதில் தீர்ந்துபோமென்று நாம் கூறவில்லை.

எமது தலைவிதி மிகச் சிறிய மனிதர்களிடம்-சிந்திக்காது கோணலாக முடிவு கட்டுபவர்களிடம் சிக்கியிருக்கிறது. இதனை நீக்க மக்கள் ஒன்றுபடவேண்டுமென்பதே எமது வேண்டுகோள்.

"நாட்டின் இன்றைய பிரச்னைகளால் பெருமளவு ஜப்பானிய வருமானத்தை இழந்துள்ளோம்"

அமைச்சர் ரொனி

[கொழும்பு]

"கொழும்பு, கட்டுநாயக்கா விமானநிலையத்தில் தரித்து நிற்பதைத் தவிர்க்குமாறு ஜப்பான் உல்லாசப்பிரயாணிகளை அந்நாட்டு அரசாங்கம் பணித்துள்ளதையடுத்து, எமக்குக் கிடைக்கவிருந்த பல லட்ச ஜப்பானிய யென் வருமானத்தை நாம் இன்று இழந்துள்ளோம். அத்துடன் ஒவ்வொரு வருடமும் எமக்குக் கிடைத்துவந்த ஜப்பானிய உதவிகளிலும் பெருமளவு பாதிப்பு ஏற்பட்டுள்ளது"

அண்மையில் ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நாடு திரும்பிய நிதிதிட்டமிடல் அமைச்சர் ரொனி டி மெல் இவ்வாறுதெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது: கடந்த ஐந்து மாத காலத்தில் 600 லட்சம் ஜப்பானியர்கள் உல்லாசப்பிரயாணங்களை மேற்கொண்டனர். எமது நாட்டின் நிலைமை சீராக இருந்திருந்தால் இவர்களில் 50 சதவீதமானவர்கள் இலங்கைக்குவந்திருப்பார்கள். இன்று எமது நாட்டில் நிலவும் சூழ்நிலைகளால் உல்லாசப் பிரயாணிகளுக்கு பாதுகாப்பு இல்லையென ஜப்பானிய அரசு கருதி தனது பிரஜைகளை இங்கு செல்லவேண்டாமென அது பணித்துள்ளது.

ஜப்பானிய அரசின் கூட்டு முயற்சியில் அமைக்கப்பட்ட டோக்கியோ சிமெந்து தொழிற்சாலை சேதமாக்கப்பட்டதும், எயர்லங்கா குண்டு வெடிப்பின்போது பல ஜப்பானியர்கள் கொல்லப்பட்டதுமே இந்நிலைக்கு பிரதான காரணங்களாகும்.

எனவே நாட்டில் இனப்பிரச்னைக்கு சுமுகமான தீர்வு ஒன்று ஏற்படாவிட்டால் அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடையும் அபாயம் உள்ளது.

தொண்டமனாறு - பரு.கடலில் கடற்படைரோந்து அதிகரிப்பு

[வல்வெட்டித்துறை நிருபர்]

தொண்டமனாறு தொடக்கம் பருத்தித்துறை முனை வரையில் உள்ள கடற்கரையில் கடந்த வாரம் முதல் ஏழுக்கும் மேற்பட்ட கடற்படைப் பீரங்கிக் கப்பல்கள் ரோந்து விசைப் படகுகள், துப்பாக்கிப் படகுகள் என்பன நிலை கொண்டுள்ளன.

இதே வேளை இக் கப்பல்களிலிருந்து முகாம்களுக்கும் கரையோரங்களிலும் படைகள் இறக்கி விடப்படலாம் என்பதனைக் கருத்திற் கொண்டு புலிகளின் கரையோரக் கண்காணிப்பும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை முதல் நண்பகல் வரை தொண்டமனாறு இராணுவ முகாமுக்கு பீரங்கிக் கப்பலிலிருந்து சிறிய படகுகள் மூலம் பல தடவைகள் பொதிகளை படையினரால் இறக்கி விடப்பட்டதைக் காணக்கூடியதாக இருந்தது. இதற்கு உதவும் வகையில் வானத்தில் ஹெலிகொப்டர், வேவு விமானம் ஆகியன சுற்றிப் பறந்த வண்ணம் இருந்தன. பறந்த ஹெலிகொப்டர் வல்லோதை யூடாகச் சென்ற வாகனங்கள், சைக்கிளில் சென்றவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தது ஹெலியிலிருந்து நடத்தப்பட்ட தாக்குதலால் ஒரு வான் ஓரு லொறி சேதமானதோடு இருவர் காயமடைந்ததாகவும் தெரியவருகிறது.

கடந்த இரவு பூராகவும் இப்பகுதியில் பொம்மர், சீ பிளேன், அவ்ரோ போன்ற விமானங்கள் அடிக்கடி உறுமிச் சென்று நித்திரையிலிருந்த மக்களைக் கிலி கொள்ளச் செய்தன.

கொல்லங்கலட்டி பிள்ளையார் கோவில் மஹோற்சவம்

யாழ்ப்பாணம், வெள்ளி

மாவிட்டபுரம் கொல்லங்கலட்டி வீரகத்திப் பிள்ளையார் கோவில் மகோற்சவம் அடுத்த மாதம் 2-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. பத்தாம் திகதி புதன்கிழமை தேர் உற்சவமும், பதினோராம் திகதி வியாழக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

வருடாந்த மகோற்சவம்

பண்டத்தரிப்பு, வியாழன்

சுழிபுரம் - பருளாய் ஸ்ரீசிவ சுப்பிரமணியசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் இம்மாதம் 31ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது

அடுத்தமாதம் 10ம் திகதி ரதோற்சவமும், மறுநாள் 11ம் திகதியன்று தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளது.

நல்லெண்ணத்துடன் செய்யும் விமர்சனங்களு இடமளிக்கப்படவேண்டும்

பண்டத்தரிப்பு,வியா.

"அசாதாரண நிலை ஏற்பட்டிருக்கும் இக்கால கட்டத்தில் எமது மக்கள் ஒற்றுமை, கட்டுப்பாடு ஆகியவற்றை பேணி எந்தக் கஷ்டங்கள் வந்துற்ற போதிலும்திடமனதுடன் வாழ முற்பட வேண்டும்"

இவ்வாறு பண்டத்தரிப்பு விழிப்புக் குழு நடாத்திய கலை நிகழ்ச்சியில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் பண்டத்தரிப்பு பங்குத் தந்தை அருட் திரு கே. ஜெயக்குமார் அடிகள் குறிப்பிட்டார்.

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நேற்று நடைபெற்ற இந்த கலைநிகழ்ச்சியில் விழிப்புக்குழுத் தலைவர் திரு ஏ.எஸ். செபரத்னம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் அருட் திரு.ஜெயக்குமார் அடிகளார் தொடர்ந்து உரையாற்றுகையில் "குறை நிறைகள் சுட்டிக்காட்டப்படுவதை ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் மிகவும் அவசியம். விமர்சனங்கள் நல்லெண்ணத்துடன் செய்யப்படும் போது அவற்றிற்கும் இடமளிக்கப்படவேண்டும். மக்களின் நியாயமான கருத்துகளும் விமர்சனங்களும் வெளியிடப்படுவது இன்றைய காலகட்டத்தில் நன்மை பயக்கும்" என்றார்.

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அதிபர் திருமதி மு சுப்பிரமணியம் உரையாற்றுகையில் பண்டத்தரிப்புப் பகுதியின் கலை,கலாசார,சுகாதாரவளர்ச்சிக்கு பண்டத்தரிப்பு விழிப்புக் குழுவினர் மேற்கொண்டு வரும் செயல் திட்டங்களைப் பாராட்டினார்.

பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. அ. வ. துரையப்பாவும் உரையாற்றினார். பண்டத்தரிப்பு விழிப்புக் குழுவின் உதவிச் செயலாளர் திரு. என். எம். கந்தசாமி நன்றியுரைநிகழ்த்தினார்.

இக் கலைநிகழ்ச்சியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மாணவர்கள் தயாரித்துஅளித்த 'வால்பேத்தை', 'அன்றைக்கு அதுகள், இன்றைக்கு இதுகள்' என்ற நாடகங்களும், பெரியவிளான் பங்கைச்சேர்ந்த யுவதிகள் பங்குபற்றிய 'புரியவில்லையா' என்ற நாடகமும் மற்றும் பண்டத்தரிப்பு மாதர் கி.அ சங்கத்தின் பரத நாட்டிய நிகழ்ச்சியும்,திருமதி மதிவாணி அருந்தலிங்கம் தயாரித்தளித்த நடன நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

அன்பளிப்பு

[கொழும்புத்துறை]

திருநெல்வேலிப் பொதுச் சந்தையில் கண்ட இடங்களிலும் குப்பை கூழங்களைப் போடாது சுகாதாரத்தைப் பேணும்முகமாக மில்க்வைற் அதிபர் திரு க. கனகராசா பத்து குப்பைத் தொட்டிகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

காரியாலயம் இடமாற்றம்

யாழ்ப்பாணம், வெள்ளி

உரும்பராயில் இயங்கிவந்த கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் [எண்பார்வைப் பகுதி] காரியாலயம் ஹெலிதாக்குதலினால் சேதத்துக்குள்ளானது.

காரியாலயக்கட்டிடம் சேதமடைந்ததையடுத்து கோண்டாவில் மஞ்சத்தடி கிராம அபிவிருத்திச்சங்கக் கட்டிடத்திற்கு காரியாலயம் இடமாற்றம்செய்யப்பட்டுள்ளதாக உதவிஆணையாளர் திரு. எம். எஸ். தர்மலிங்கம் தெரிவித்துள்ளார். [வா]

உத்தரப் பிரதேஷ் மீரட் நகரில் நிலைமை அமைதி!

புதுடில்லி, மே. 28

உத்தர பிரதேச நகரமான மீரட்டில் இன்று அமைதி நிலவுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மீரட்டில் கடந்த பல நாட்களாக இவ்வன்செயல்கள் இடம்பெறுவது தெரிந்ததே. இதனையடுத்து இப்பகுதியில் ஊரடங்குச்சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும் இன்றுஈதுல்பிதரை முன்னிட்டு காலை 7 மணியிலிருந்து ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து மீரட்பநகரிலுள்ள மசூதிகளில் வழமை போல் தொழுகைகள் இடம்பெற்றன. நகரில் வியாபாரமும் இடம்பெற்றது.

வன்செயல்கள் மீண்டும் இடம்பெறுமல் இருக்க இராணுவத்தினரும் பார-இராணுவத்தினரும்கடமையிலீடுபட்டுள்ளனர். (ஊ,

குடாநாடு மீதான இராணுவ நடவடிக்கையில் நிதானம் வேண்டும்! ராஜீவ் எச்சரிக்கை

புதுடில்லி, மே. 29

'இலங்கை அரசு யாழ். குடாநாட்டின் மீது மேற்கொண்டுள்ள இராணுவ நடவடிக்கைகளில் நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.'' என்று இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி இலங்கை ஜனாதிபதிக்கு எச்சரித்துள்ளார்.

யாழ். குடா நாட்டின் மீது கடந்த நான்கு தினங்களாக இடம்பெற்று வரும் இராணுவத் தாக்குதல்கள் குறித்து இலங்கைக்கான இந்தியஸ்தானிகர் ஜே. என். டிக்ஸிற் மூலமாக ஜனாதிபதி ஜயவர்த்தனவுக்கு திரு. காந்தி கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இக் கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள், மற்றும் பொதுமக்களின் குடியிருப்புகள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், ஆலயங்கள் என்பன எந்த வகையிலும் பாதிப்படையலாகாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈழநாடு

[1ம் பக்கத் தொடர்ச்சி]

எவரும் காயமடையவில்லை.

இதேவேளை கடந்த செவ்வாயிரவு பொம்மர் விமானங்களிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கடுமையான குண்டுத் தாக்குதலினுல் 'ஈழநாடு' முகாமையாளர் திரு. து. சீனிவாசகத்தின் வீடும் பலத்த சேதமடைந்தது

ஊரடங்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வதற்காக நடமாடும் பாதசாரிகள் மற்றும் சைக்கிளோட்டிகள்மீதும் ஹெலிகாப்டரிலிருந்து துப்பாக்கிப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்ட சம்பவங்களும் பரவலாக இடம்பெற்றுள்ளன.

மக்கள் கூட்டமாக நிற்கும் இடங்கள் மற்றும் பாதுகாப்புக் கருதி மக்கள் ஏற்கனவே கூடி நின்ற பகுதிகளுக்குள் புதியவர்கள் ஓடிச்சென்று நுழைவதைக் கண்டதும் சரமாரியாக வேட்டுக்கள் தீர்க்கப்படுகின்றன அல்லது 'பரல்' குண்டுகள் வீசப்படுகின்றன. [வண்ணை சிவன்கோயிலில் இடம்பெற்ற சம்பவம் இதற்கு ஓர் உதாரணம்].

இதுதவிர யாழ். நகரப்பகுதிகளிலும் 'ஊரடங்குச் சட்டம்' என்று ரீதியில் எங்கும், எவ்வேளையிலும் கண்மூடித்தனமாக ஷெல்கள் பிரயோகிக்கப்படுகின்றன.

இன்றும் ஊரடங்கு

யாழ்ப்பாணம், வெள்ளி

ஊரடங்குச் சட்டம் இன்று வெள்ளிக்கிழமையும் நீடிக்கப்பட்டுள்ளது என்று, யாழ்ப்பாணம்வானொலி நேற்றுக் காலை அறிவித்துள்ளது.

மறு அறிவித்தல்வரை ஊரடங்குச் சட்டம் அமுலிலிருக்குமென்றும் இந்த யாழ்ப்பாணம் வானொலி அறிவித்துள்ளது

புதுடில்லி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இலங்கைப் பிரச்னை குறித்து ஆலோசனை நடத்தினுர்.

யாழ் குடாநாட்டில அப்பாவித் தமிழ்மக்கள் மீது இராணுவம் மேற்கொண்டுள்ள பாரிய தாக்குதல் குறித்து முதல்வர் திரு. ராமச்சந்திரன் பிரதமரிடம் வலியுறுத்தியதாகவும் தமிழ்மக்களைக் காப்பாற்ற உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று வலியுறுத்தியதாகவும் அறிக்கைகள்தெரிவிக்கின்றன.

[ஊ]

ஷெல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இபபீரங்கித் தாக்குதலால் பழைய பூங்கா வீதியில் உள்ள சீன உணவு விடுதிக்கருகாமையில் பீரங்கிக் குண்டுஒன்று விழுந்ததால் டாக்டர் லூதர், 'வாசன்' போக்குவரத்து உரிமையாளர் குமாரசிங்கம். அவர் வீட்டுக்கு அருகாமையில் உள்ள சேவயர் பரமபதி ஆகியோர் அந்த இடத்தில உடல் சிதைந்த நிலையில் மரணமானுர்கள்.

மரணமான சேவயர், பரியோவான் கல்லூரி அதிபரின் சகோதரராவார்.

எரிகுண்டு வீச்சு

செவ்வாய்க்கிழமை மாலை 6-50 மணியளவில் 'அவ்ரோ' விமானத்திலிருந்து வீசப்பட்ட மூன்று பெற்ரோல் குண்டுகள் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரின் பழைய விளையாட்டு மைதானத்தில் விழுந்து வெடித்து எரிந்தன. அச்சமயம் கல்லூரியினுள் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் தஞ்சம் புகுந்திருந்தனர்.

இதே நேரத்தில் இந்த விமானத்திலிருந்து குருநகர் சென் ரெக்வாசிகசாலை, சென். ஜேம்ஸ் தேவாலயம் ஆகியவற்றுக்கு அருகாமையிலும் பெற்ரேல் குண்டுகள் வீசப்பட்டதினுல் பெரும் சேதம்ஏற்பட்டது.

உலகச் செய்திகள்

இந்து சமுத்திரத்தில் ஆபத்தான நிலை!

புதுலில்லி, மே 29

இலங்கையில் யாழ். குடாநாட்டின் மீது அரசு மேற்கொண்டுள்ள இராணுவ நடவடிக்கை, இநது சமுத்திரப் பிராந்தியத்தில் ஆபத்தானநிலைமையை தோற்றுவித்துள்ளது.'' என்று இந்திய அரசு யாழ் குடா நாடு மீதான இராணுவ நடவடிக்கை குறித்து வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது

யாழ். குடாநாடடு நிலைமை: இந்தியா கவலை, கண்டனம்

புதுடில்லி, மே-27

யாழ். குடாநாட்டில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு அரசபடைகளின் தாக்குதல்கள் நடத்தப்படுவது குறித்து இந்திய அரசு தனது கவலையையும், கண்டனத்தையும் வெளியிட்டுள்ளது.

இந்திய அரசு இதுகுறித்த வெளியிட்டுள்ள அறிக்கையில், அரசபடைகளும், போராளிகளும் மோதலைநிறுத்திப்பேச்சுவார்த்தைக்கு முன்வரவேண்டும். பேச்சுக்களில் நம்பிக்கை வைக்கவேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலிகிழக்கில் புதிதாக 6 கிராம சேவையாளர் பிரிவு

அச்சுவேலி, வியாழன்

இதுவரை 11 கிராம சேவகர்கள் பிரிவாக இயங்கிவந்த வலிகிழக்குஉதவிஅரசாங்க அதிபர் பிரிவு,மேலும்புதிதாக ஆறு பிரிவுகள் அமைக்கப்பட்டு 17 பிரிவுகளாக இயங்கவுள்ளன.

இப்புதிய ஆறு பிரிவுகளும், அச்சுவேலி, பத்தமேனி, உரும்பிராய், புத்தூர் கிழக்கு, புத்தூர் மேற்கு, சிறுப்பிட்டி ஆகிய கிராமசேவகர் பிரிகளை இவ்விரு பிரிவுகளாகப் பிரித்து அமைக்கப்படவுள்ளன.

அச்சுவேலி-அச்சுவேலிதெற்கு அச்சுவேலி வடக்கு, பத்தமேனி - பத்தமேனி, வளலாய்-இடைக்காடு; உரும்பிராய் - உரும்பிராய் வடக்கு, உரும்பிராய் தெற்கு; புத்தூர் கிழக்கு - புத்தூர் கிழக்கு, வாதரவத்தை;புத்தூர்மேற்கு-ஆவரங்கால், நவக்கிரி; சிறுப்பிட்டி - சிறுப்பிட்டி அச்செழு;

புதிய கிராம சேவையாளர் பிரிவுகளுக்கான எல்லைகளும் வரையறை செய்யப்பட்டுள்ளன.

"பாகிஸ்தான் போல்

ராணுவ ஆட்சியை நோக்கி நாடு செல்கிறது"

(நெல்லியடி நிருபர்)

இன்று இலங்கை அரசின் போக்கை நோக்குமிடத்து நாடு, பாகிஸ்தான் போல இராணுவ ஆட்சியை நோக்கி முன்னெடுத்துச்செல்வதாகவே கருதவேண்டியுள்ளது. இவ்வித நிலைமை உருவாகுமானுல், தமிழர் மட்டுமன்றி இலங்கை வாழ் சகல இன மக்களுமே பாரதூரமாக பாதிக்கப்படுவதுடன் இழந்து போகவுள்ள ஜனநாயக உரிமைகளை மீட்க பல ஆண்டுகள் போய்விடவேண்டிய அவசியம் ஏற்படும்''

இவ்வாறு வடமராட்சி பிரஜைகள் குழு ஒன்றியத் தலைவர் திரு. ஜே. ஜீ. இராசேந்திரம் நெல்லியடி பில் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் உரையாற்றும்போது கூறினுர்.

திரு. மகாலிங்கசிவம் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய திரு. இராசேந்திரம் கூறியதாவது:

துப்பாக்கிமுனையில் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றலாம். ஆனுல் அதே துப்பாக்கியைக்கொண்டு அராஜக ஆட்சியை நிலைகொள்ளச்செய்ய முடியாது.

இக் கூட்டத்தில் எழுப்பப்பட்ட வினுஒன்றுக்கு விடையளித்த திரு. இராசேந்திரம், இந்தியாவின் நிலைப்பாடு கவலைக்குரியதாகும் எனக் கூறினுர். எந்தத் தமிழ்இனத்தையும் அதன் நலவுரிமைகளையும்பாதுகாக்க வேண்டுமென்ற குறிக்கோளுடன் இந்தியஅரசு மத்தியஸ்தத்தில் இறங்கியதோ, அதைப் பாதுகாக்க உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். தமிழினம் ஒட்டுமொத்தமாக அழிக்கப்பட்டபின் எவருடைய உரிமைகளைப் பாதுகாக்க இந்திய அரசு முன்வரப் போகிறது என்ருர்.

திருவாளர்கள் சி. செல்லையா சட்டத்தரணி அ. க நடராசா ஆகியோரும் பேசினர்,

நிறைகுறைவான பாண்விற்பனை

(அச்வேலி நிருபர்)

அச்சுவேலிப் பகுதியில்நிறைகுறைவான பாண் விற்பனை செய்யப்படுவதாக மக்கள் மத்தியில் பேசப்படுகிறது.

அண்மையில்கடையொன்றில் ஒரு ரூபா 55 சதம் கொடுத்து அரை இருத்தல் பாண் வாங்கிய விவசாயி ஒருவர், தான் வாங்கியபாணின் நிறை. வடிவம் ஆகியவற்றில்சந்தேகப்பட்டுதராசில்அதனைப்போடுவித்து பார்த்தபோது 125 கிரும் இருப்பதை கண்டு அதிர்ச்சியடைந்ததுடன்அரைப்பசியைப் போக்கக்கூடஇப்பாண்போதாதென மக்கள்மத்தியில் கூறிவிட்டு பாணையும் கொண்டு வீடு சென்ருர்.

இராணுவ துப்பாக்கிக்கு கால் நடைகள் பலி

வேலணை, வியாழன்

மண்டைதீவு மினி முகாமில் உள்ள இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு மண்டைதீவு புல் வெளிகளில் மேய்ந்து கொண்டிருக்கும் கால் நடைகளும் பலியாகின்றன மண்டைதீவு சேவை உத்தியோகத்தர் திரு. கே. சிவகுலதிலக சிங்கத்தின் இரண்டாயிரம் ரூபா பெறுமதியான கலப்பின சுமாடு ஒன்றும், கலப்பின ஆடொன்றும் இவ்விதம் சுட்டுக் கொல்லப்பட்டன.

அவ்விதம் இறக்கும் கால் நடைகளை எடுத்து புதைப்பதற்கு அவ்விடத்திற்குச் செல்ல முடியாது அவற்றை அவ்விடத்திலேயே விட வேண்டிய நிலை அப்பகுதி மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

ஆலயத்தில் மிருக பலி

[பண்டத்தரிப்பு நிருபர்]

பிரான்பற்று கிராமத்திலுள்ள ஆலயம் ஒன்றில் அண்மையில் மிருகபலி நடைபெற்றபோது அங்கு சுமார் 275 ஆட்டுக்கடாக்கள் பலியிடப்பட்டன.

பெருந்தொகையான மக்கள் வெட்டப்பட்ட ஆட்டுக்கடாக்களை வாங்கிச்செல்ல ஆலயத்தில் திரண்டிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது கோழிகளும் பலியிடப்பட்டன.

நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

வட்டு. சிவன் ஐக்கிய நாணய சங்கப் பொதுகூட்டம் அண்மையில் வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. சி. புஷ்பபாலன், உபதலைவர் திரு அ. அரியரத்தினம், செயலாளர் திரு. அ. துரைரத்தினசிங்கம், உப செயலாளர் திரு.செ. காசிப்பிள்ளை, பொருளாளர் திரு. அ. முருகவேள். செயற்குழு உறுப்பினர்களாக 7 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

இடி விழுந்தது

நெல்லியடி, வியாழன்

இடிமுழக்கத்துடன் கூடிய மழை கடந்த வெள்ளியன்று பெய்தபோது இடியொன்று கரவெட்டி கிழக்குப் பகுதியில் ஒரு பனையின் மேல் விழுந்ததுடன் ஒரு பொறி அயலிலுள்ள வீடொன்றின் ஓட்டுக் கூரையைத் துளைத்துக் கொண்டு வீட்டில் இருந்த ஒரு பெண்ணின் காலடியில் விழுந்தது.

தினமும் நிதர்சனம் ஒளிபரப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதர்சனம் ஒளிபரப்புச் சேவை தினமும் மாலை 7 மணிக்கு நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நிலைபற்றி மக்களுக்கு உடனுக்குடன் தெரியப்படுத்தும் நோக்குடனேயே இச்சேவை நடைபெறுகிறது.

புதிய கிராமசேவையாளர்

அச்சுவேலி, வியாழன்

புதிய கிராமசேவையாளர்களாகப் பின்வருவோர் நியமனம் பெற்றுள்ளனர்.

திரு. கே. மகாலிங்கம், திரு. எஸ் செல்வச்சந்திரன், திரு. கே. நாகேந்திரன், திரு. எஸ். சண்முகவடிவேல், திரு. வி ஜெகதாஸ், திரு. கு.குலேந்திரராசா.

இத்துடன் விசேட சேவை அலுவலர்களைக் கிராமசேவையாளர்களாசப் பதவிமாற்றம் செய்வது என்ற உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் தீர்மானத்திற்கு அமைய வலிகிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் விசேடசேவை அலுவலர்களாகக் கடமையாற்றும் ஆறுபேரும் கிராம சேவையாளர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
வெள்ளிக்கிழமை 29-5-87

தஞ்சமடையக் கோரிய அறிவிப்பையடுத்து

வண்ணை சிவன் கோயிலுக்குள் புகுந்தோரை படையினர் கொன்றுள்ளனர்

மரணவிசாரணையில் நீதவான் தீர்ப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

"ஆயுதப்படையினர் பொது மக்களை ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சமடையுமாறுகேடுக் கொண்டதற்கிணங்க வண்ணை, சிவன் கோவிலில் தஞ்சமடைந்த அப்பாவிமக்களை படையினரே குண்டுவீசி பலியாக்கியுள்ளனர். அப்படையினரைக்கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு உத்தரவிடுகின்றேன்".

வண்ணை சிவன்கோவில் குண்டு வீச்சுகுப் பலியானவர்களின் மரண விசாரணை நடாத்திய யாழ் நீதவான் க கதிரவேற்பிள்ளை இவ்வாறு தீர்ப்பளித்துள்ளார்.

இச்சம்பவத்தில் வை. முத்துக்காயரோண செட்டியார், வி. லிங்கரத்தினம், ஆ. சுதாகரன் ஆகியோரின் மரண விசாரணை நேற்று நடைபெற்றது.

விசாரணை முடிவில் கொலையெனத் தீர்ப்பளித்த நீதவான் மேலும் தெரிவித்ததாவது: ஆயுதப்படையினர் 26-ம் திகதி வானொலி மூலமும், துண்டுப்பிரசுர மூலமும் யாழ்நகர மக்களை ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சமடையுமாறு தெரிவித்திருந்தனர். அன்றைய தினம் ஊரடங்குச் சட்டத்தை அமுல்நடத்திவிட்டு ஆலயதாக்குதலை நடத்தினர்.

'படையினர் தெரிவித்தபடி வண்ணை சிவன் கோயிலில் தஞ்சமடைந்த மக்கள் இத்தாக்குதலினால் கொல்லப்பட்டுள்ளனர். படையினர் திட்டமிட்டே மக்களைப் படுகொலை செய்துள்ளனர். (கு)

மேலதிக இராணுவம்

கொழும்பு, புதன்

யாழ்ப்பாணத்தையும் அதை சுற்றியுள்ள இராணுவ முகாம்களுக்கும் அதிகளவில் இராணுவ துருப்புக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி தெரிவித்துள்ளார்.

"இலங்கையை அழிக்கும் நோக்குடன் தமிழக அரசு இயங்குகிறது" லலித் குற்றச்சாட்டு

காலி, வியா

'தமிழ்நாடு இலங்கையை முற்றாக அழித்துவிடும் நோக்குடன் செயற்பட்டுவருகிறது. இலங்கையின் ஒருமைப்பாட்டையும் சுதந்திரத்தையும் மதிப்பவர்களையும் படுகொலை செய்வதற்காகத் தமிழக அரசு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், ஈரோஸ் இயக்கத்துக்கும் உதவி வழங்கியுள்ளது.''

இவ்வாறு தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி காலியில்நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகைல் கூறினார்.

"இதுகாலவரை தமிழ்த்தீவிரவாதிகளுக்கு மறைமுகமாக உதவிவந்துஇப்போது பகிரங்கமாகவே உதவிசெய்ய ஆரம்பித்துள்ளது இதுவரைதமிழ்த் தீவிரவாதிகளுக்குஉதவிசெய்யவில்லையென்றுநம்பவைத்தவர் இப்போது உண்மையைஉணருவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது'' என்றும் திரு. அத்துலத் முதலி கூறினார்.

இருவர் பலி!

யாழ்ப்பாணம், வெள்.

யாழ். நகரில் நேற்றுமுன் தினம் நடந்த பொம்மர் தாக்குதலில் இருவர் பலியானார்கள். 15 பேர் காயமடைந்தனர். பல வீடுகள் சேதமடைந்தன.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எஸ். திருநீலகண்டர், எஸ். சுப்பிரமணியம் ஆகியோர் பலியானவர்கள்.

வர்த்தக நிலையங்கள் பலத்த சேதம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ் நகர் பகுதியில் நேற்று முன்தினம் சுமார் 50 குண்டுகள் வீசப்பட்டதால் பல வர்த்தகநிலையங்கள் சேதமடைந்தன. பழைய மார்க்கெட் பகுதி பலத்த சேதமடைந்துள்ளது.

பொம்மர், அவ்ரோ, ஹெலி தாக்குதலுடன் கோட்டையிலிருந்து ஷெல் தாக்குதலும் காலை முதல் இரவு எட்டு மணி வரை நீடித்தது.

பல குடும்பங்கள் பகல் முழுவதும் பதுங்குகுழிகளிலேயே தஞ்சமடைந்திருந்தன.

ஆரியகுளம் சந்தியில் ஒரு ஷெல் விழுந்து வெடித்ததில் கடை ஒன்று சேதமடைந்ததுடன் மின்கம்பிகள் அறுந்தன. இதனால் ஆரியகுளத்திற்கு அப்பாலுள்ள பகுதி இருளில் மூழ்கியுள்ளது. இத்தாக்குதலைத் தொடர்ந்து ஆரியகுளம் பகுதியிலுள்ள பல குடும்பங்கள் வெளியேறியுள்ளன.

ராசாவின்தோட்ட வீதியிலும் ஷெல் விழுந்து வெடித்ததால் அப்பகுதியிலும் குடும்பங்கள் வெளியேறியுள்ளன.

நாவலர் வீதியில் நேற்று முன்தினமிரவு பொம்மர் தாக்குதலினால் இரு வீடுகள் சேதமடைந்தன. இரவிரவாக அப்பகுதியிலுள்ள பல குடும்பங்கள் வெளியேறின. 1ம்,2ம், 3ம் குறுக்குத்தெரு, ஆனைப்பந்தி, அத்தியடி, கோவில் வீதி மற்றும் பகுதிகளிலிருந்தும் குடும்பங்கள் வெளியேறியுள்ளன.

11 படையினர் பலி 40 பேர் காயம் [அரசு அறிவிப்பு

கொழும்பு, வியாழன்

வடமராட்சிப் பகுதியில் நடைபெற்ற மோதலில் 11 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், 40 படையினர் காயமடைந்ததாகவும் இலங்கையரசு அறிவித்துள்ளது.

இம்மோதலில் 20 தீவிரவாதிகள் பலியானதாகவும் அரசு அறிவித்துள்ளது.

இதேசமயம் முதல்நாள் மோதலில் 65 படையினர் காயமடைந்ததாக இந்தியவானொலி தெரிவித்தது.

வருந்துகிறோம்

[[யாழ்ப்பாணம்]

கடந்த இரு தினங்களாக யாழ். நகர சுற்றாடலில் இடம்பெற்ற தாக்குதல்கள் காரணமாக எமது சக்திக்கும் அப்பாற்பட்ட காரணங்களினால் 'ஈழநாடு' பத்திரிகை வெளிவரவில்லை என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகிறோம், இது குறித்து எமது வருத்தத்தையும் தெரிவிக்கிறோம்.

[ஆ—ர்]

மயில்களும் தாக்கு நலுக்க இலக்காயின

யாழ்ப்பாணம், வெள்ளி

வண்ணை வைத்தீஸ்வரர் கோவில்மீது பொம்மர் தாக்குதல்மேற்கொள்ளப் பட்டபோது கோவிலின்வடக்கே இரண்டாம்வீதியில் அமைத்திருந்த மயில்க்கூடும் பாரிய சேதத்துக்குள்ளாளது. இதனால் அக்கூட்டினுள் இருந்த மயில்கள்காயங்களுக்குள்ளானதாகவும் வேற்றிடங்களில் பாதுகாக்கப் படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. [க]

ஆலயநிர்வாகம் தீர்மானம்

[நெல்லியடி நிருபர்]

வதிரி உல்லியன் ஒல்லை அம்மன் ஆலயத்துக்குச் சொந்தமான முல்கொடைஎன்னும் 36 பரப்புக் காணியை,தற்போது அக்காணியில் வசித்துவருபவர்களுக்கும், அப்பகுதி நிலமற்ற மக்களுக்கும் வழங்க மேற்படி ஆலயநிர்வாகசபைதீர்மானித்துள்ளது.

இதற்கான குழுவொன்று திரு இ. வரதராயன் தலைமையில் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

சிவன்கோயில் குண்டு வீச்சு

ஒருவரின் சடலம் அடையாளம் காணப்படவில்லை!

யாழ்ப்பாணம் வெள்ளி

யாழ்ப்பாணம் சிவன்கோவிலில் பாதுகாப்புக் கருதி இருந்த பொதுமக்கள்மீது நேற்றுமுன் தினம் விமானம் குண்டு வீசியதால் ஸ்தலத்திலே பலியானவர்களில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஐவரின் சடலங்களில் நால்வரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டன. ஒருவரின் சடலம் அடையாளம் காணப்படுவதற்காக ஆஸ்பத்திரிப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

அடையாளம் காணப்பட்டோரின் பெயர் விபரம் பின்வருமாறு:

வைத்திலிங்கம் முத்துக்காயாரோகண செட்டியார் [வயது 54] (இவர் கோவிலின் இரண்டாவது உரிமையாளர்], வி. லிங்கரத்தினம் (வயது 23 யாழ்ப்பாணம், ஆ. சுதாகரன் (வயது 21) கன்னாதிட்டி (இவர் ஒரு நகைத் தொழிலாளி]. சொக்கன் சுப்பிரமணியம் யாழ்ப்பாணம்ஆகியோராவர்.

இந்நால்வரின் மூவர் சடலங்களை நேற்று ஆஸ்பத்திரியில் டாக்டர் கணேசரட்ணம் தலைமையில் மூவர்கொண்ட குழு பிரேதபரிசோதனை செய்தது. நீதிபதி திரு, க. கதிரவேற்பிள்ளை மரணவிசாரணையை மேற்கொண்டார்.

(கு)

நற்றுணையாவது

மனிதர்களுக்கு இடையூறும் துன்பங்களும் ஏற்படுவதும் அவற்றை நீக்கியும் வென்றும் வாழ்வது இயற்கை.

மனித உயிர் உலகில் தோன்றுவதற்கு முன்தாயின் வயிற்றில் சந்திக்கும் நெருக்கடிகளைப் பற்றி மணிவாசகர் பெருமான் போற்றித் திருவகவல் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். தினமும், காலை, மதியம், மாலையில், இரவில் என வரும் தொல்லைகளை பற்றிப் பட்டினத்தார் போன்ற அருளாளர்கள் [illegible]த்துக் கூறியிருப்பதுடு அவற்றை வெல்ல [illegible] முயற்சியோடு இறையருளை வேண்டும் என்று சுட்டிக் காட்டியிருக்கின்றனர்.

கற்றுணைத் துணையாகக் கட்டிக் கடலில்விட்டாலும் இறைநாமத்தைக் கூறி வெல்லலாம் என்பதை நிதர்சனமாகத் திருநாவுக்கரசர் உணர்த்தியதை அவரது வாழ்வு - பெரியபுராணம் - திருப்பாதிரிப்புலியூர் என்னும் தலம் என்பன உணர்த்துகின்றன.

திருநாவுக்கரசருக்கு அருளிய சிறப்பால் திருப்பாதிரிப்புலியூரில் எழுந்தருளியுள்ள சிவபிரானுக்குத் தோன்றாத் துணைநாதர் என்று ஒரு திருப்பெயர் வழங்கிவருகின்றது.

கல்லுடன் கட்டிக் கடலில் விட்டதுபோல் நமக்கு வந்துள துன்பத்தினின்று நாம் விடுபட நற்றுணையாக விளங்கக்கூடியது சிவ நாமமேயாகும்.

—அருளாளன்

யாழ் நகரிலிருந்து

10000 மக்கள் வெளியேறினர் ஆலயம் பாடசாலைகளில் தஞ்சம்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ். நகரிலிருந்து கடந்த மூன்று தினங்களில் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் அகதிகளாக வெளியேறி, கோவில்களிலும் கல்லூரிகளிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

நேற்றும் ஆயிரக்கணக்கான குடும்பங்க வெளியேறிச் செல்வதைக் காணமுடிந்தது.

பொம்மர் ஷெல் தாக்குதலைத் தொடர்ந்து நகரிலுள்ள மக்கள் வெளியேறி பாதுகாப்பானஇடங்களுக்குச் சென்றுள்ளனர்.

யாழ். பெரியகடைப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களிலிருந்து நேற்று மினி ட்ரக்டர் மூலமும் சைக்கிள்கள் மூலமும் பொருள்கள் எடுத்துச் செல்லப்பட்டன.

யாழ். நகரிலிருந்து அகதிகளாக வெளியேறிய மக்கள் கீழ்க்காணும் இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

யாழ். சைலாயப் பிள்ளையார் கோவில், சென் பற்றிக்ஸ் கல்லூரி, யாழ். ஆசனக் கோவில். கொய்யாத்தோட்டம் கிறிஸ்தவ மாதா கோவில், சென். பற்றிக்ஸ் கல்லூரி, கொய்யாத்தோட்டம் கிறிஸ்திராசா கோயில், பாஷையூர் சென். அந்ரனிஸ் தேவாலயம், கொழும்புத்துறை சென் [illegible] கல்லூரி, பாண்டியன்தாழ்வு சந்தன மாதா தேவாலயம்.

[வி]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு மே மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B [illegible]/81 Eelanadu. P. O. Box Telegram, Eelanadu. Telephone: — 22389 24126.